**தங்காலை பிரதேச சபை**

**அம்பாந்தோட்டை மாவட்டம்**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்**

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 ஏப்ரல் 04 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 யூன் 24 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 செப்தெம்பர் 30 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

**1.2 அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 1.3.2, 1.3.3 மற்றும் 1.3.6 ஆம் பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து தங்காலை பிரதேச சபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**1.3.1 கணக்கீட்டுக் கொள்கைகள்**

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) வழங்கல் மற்றும் உபகரணக் கணக்கின் மீதி ரூபா 1,287,188 மற்றும் கிடைக்க வேண்டிய முத்திரைக் கட்டணங்கள் ரூபா 63,401,237 குறைத்து நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) திரண்ட நிதியம் மற்றும் பற்றாக்குறை கணக்கின் ஆரம்ப மீதி ரூபா 8,441,775 குறைவாகவும், இறுதி மீதி ரூபா 4,460,000 கூடுதலாகவும் கடன்கொடுத்தோர் பற்றாக்குறை ஒதுக்கீட்டு சீராக்கத்தின் போது ரூபா 4,000,000 கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) இரண்டு வங்கிக் கணக்குகளில் ஆரம்ப மீதி ரூபா 669,367 தொகையும் பொது வங்கிக் கணக்கில் மீதி ரூபா 6,919,180 குறைத்தும் ஐந்தொகையில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) முன்னைய இரண்டு ஆண்டுகளுக்கு கிடைக்க வேண்டிய ரூபா 1,815,607 கூட்டுத்தொகையான சம்பளங்கள் மற்றும் ஹூம்மான நிலையத்திற்குரிய ரூபா 452,150 ஆன வருமானம் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(உ) 2015 யூலை 16 ஆந் திகதி நன்கொடையாக கிடைத்திருந்த ரூபா 300,000 தொகையான வாடிகல காணியின் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) கட்டிடங்களை நிர்மாணிப்பதற்கும் இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்குரிய செலவிடப்பட்ட ரூபா 4,845,519 தொகையான செலவினம் மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) முன்னைய ஆண்டிற்காக மீளாய்வாண்டில் கிடைக்கப்பெற்றிருந்த நிர்மாண வேலை மானியங்கள் ரூபா 4,294,654 கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்ததுடன், இரண்டு நிர்மாண வேலைகளுக்குரிய கிடைக்க வேண்டிய ரூபா 1,851,380 கூட்டுத்தொகையான பணம் ஆண்டின் வருமானத்திலிருந்தும் கடன்கொடுத்தோர் மீதியிலிருந்தும் விடுபட்டிருந்தன.

### 1.3.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ள 03 கணக்கு விடயங்களின் மீதிகள் மற்றும் அவற்றிற்குரிய புத்தகங்கள் மற்றும் பட்டோலைகளில் காண்பிக்கப்படும் மீதிகளுக்கு இடையே ரூபா 15,067,655 கூட்டுத்தொகையான சமனின்மை அவதானிக்கப்பட்டது.

### 1.3.4 பெறவேண்டிய கணக்குகள்

முன்னைய ஆண்டுகளுக்குரிய ரூபா 713,658 கூட்டுத்தொகையான வியாபார வரி மற்றும் சந்தை வாடகை வருமானம் என்பன மீளாய்வாண்டின் போது அறவிடப்பட்டிருக்கவில்லை.

### 1.3.5 செலுத்த வேண்டிய கணக்குகள்

முன்னைய ஆண்டுகளுக்குரிய நிறைவேற்றப்பட்ட நிர்மாண வேலைகளுக்காக செலுத்த வேண்டிய ரூபா 11,354,177 மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் தீர்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 1.3.6 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

ரூபா 91,159,469 கூட்டுத்தொகையான காணி மற்றும் கட்டிடங்கள் தொடர்பான அட்டவணைகள், நாளதுவரையாக்கப்பட்ட நிலையான சொத்துப் பதிவேடும் பொருள் மெய்மையாய்வு அறிக்கைகளும் ரூபா 3,753,090 கூட்டுத்தொகையான இயந்திரங்கள் மற்றும் இயந்திராதிகளும் ரூபா 79,381,293 கூட்டுத்தொகையான மோட்டார் வண்டி மற்றும் வண்டில்கள், ரூபா 5,282,007 கூட்டுத்தொகையான தளபாடங்களும் பொருத்திகளும் ரூபா 216,195 கூட்டுத்தொகையான மின் களஞ்சியம் தொடர்பான அட்டவணைகளும் நாளதுவரையாக்கப்பட்ட பதிவேடுகளும் ரூபா 38,482,462 கூட்டுத்தொகையான கடன்பட்டோர் மீதிகளும் ரூபா 3,966,981 கூட்டுத்தொகையான கடன்கொடுத்தோர் மீதிகள் தொடர்பாக விரிவான அட்டவணைகளும் ரூபா 354,500 கூட்டுத்தொகையான சபையின் வைப்புக்கள் மற்றும் ரூபா 419,521 கூட்டுத்தொகையான வீதி வளிக்கு கடன்பட்டோர் மீதிகள் தொடர்பாக காலப்பகுப்பாய்வு, அட்டவணைகள் பயன்பாட்டு பதிவேடுகள் சமர்ப்பிக்கப்படாததால் கணக்காய்வின் போது அவற்றை திருப்திகரமாக பரீட்சிப்பதற்கு முடியாதிருந்தது.

### 1.3.7 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணங்காமைகள்

கீழே விபரிக்கப்பட்டுள்ள சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணங்காமைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 2015 மே 21 ஆந் திகதிய 15/நானாவித (051) ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானம் | தொடர்புடைய அமைச்சரவை தீர்மானத்திற்கு இணங்காத வகையில் உள்ளூராட்சி மன்றங்களின் விளையாட்டு விழாவிற்காக சபை நிதியத்திலிருந்து ரூபா 166,450 செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. |
| (ஆ இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் 571(3) கோவை | காலாவதியான ரூபா 1,030,706 ஆன வைப்பு 317 மீதிகள் தொடர்பாக தொடர்புடைய பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) 2015 ஒக்தோபர் 09 ஆந் திகதிய PFD/RED/2015/08 பொது(i) ஆம் இலக்க அரச நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் 4.3 (அ) பந்தி | சபையின் சேவையிலிருந்து இடமாற்றம் பெற்றுச் சென்ற 05 உத்தியோகத்தர் களரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 323,600 ஆன கடன் மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 10,335,236 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 30,067,942 ஆக இருந்தது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 19,732,706 ஆன வீழ்ச்சியொன்று தென்பட்டது.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

கீழே காட்டப்பட்டுள்ள விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் மொத்த மீண்டெழும் செலவினம் மொத்த மீண்டெழும் வருமானத்தின் 83 சதவீதமொன்றை எடுத்திருந்ததுடன், முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் மொத்த மீண்டெழும் வருமானத்தில் ரூபா 12,459,935 குறைவொன்றும் மீண்டெழும் செலவினங்களில் ரூபா 7,272,772 அதிகரிப்பொன்றும் அவதானிக்கப்பட்டது.

(ஆ) முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக சபையின் சுய வருமானமீட்டல் ரூபா 24,779,320 குறைவொன்று தென்பட்டதுடன் சபையின் மீண்டெழும் செலவினங்கள் தொடர்ச்சியாக அதிகரிக்கும் வேகத்தில் கருத்திற் கொள்ளக்கூடிய பெறுமானத்தில் அதிகரித்திருந்தது.

(இ) வருமான மானியம் கிடைக்கப்பெறாத போது சபை வருமானங்களிலிருந்து மீண்டெழும் செலவினத்தை மேவுகை செய்ய முடியாதிருந்தமை அவதானிக்கப்பட்டதுடன், அதற்காக முறையான வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்பட்டு செயற்படுத்த வேண்டுமென அவதானிக்கப்பட்டது.

**2.3 வருமான நிருவாகம்**

**2.3.1 ஆதன வரி**

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 134(1) ஆம் பிரிவின் பிரகாரம் சபை அதிகாரப் பிரதேசத்தில் வீதவரி அறவிடக்கூடிய ஆதனங்கள் இனங்காணப்பட்டு மதிப்பீடு செய்யப்பட்டு வரி அறவிடுவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.3.2 ஏக்கர் வரி**

மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் ரூபா 127,075 கூட்டுத்தொகையான நிலுவை ஏக்கர் வரி மீதிகளில் 8 சதவீத அளவிலான குறைந்த பெறுமதியொன்று அறவிடப்பட்டிருந்தது. நிலுவை வருமானத்தை அறவிடுவதற்காக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 158 (1) (அ) ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.3.3 வாடகை**

கீழே காட்டப்பட்டுள்ள விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) 68 கடைகளிலிருந்து 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 1,128,340 வாடகை அறவிடப்பட வேண்டியிருந்த போதிலும், அந் நிலுவை மீதிகளை அறவிடுவதற்காக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 159(1) ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 2011 சனவரி 01 ஆந் திகதி முதல் அமுலாகும் தபபா/பபாகொ/2010/1 ஆம் இலக்க உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கையின் 05 ஆவது பந்தியின் பிரகாரம் 24 கடைகளின் உடன்படிக்கை 03 ஆண்டு காலத்திற்கு ஒருமுறை நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) சந்தை வாடகை**

நாளதுவரையாக சந்தை வரி அறவிடப்படாமையால் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 760,830 தொகையான நிலுவை வருமானம் நிலுவையாகக் காணப்பட்டதுடன் அதில் உள்ளடக்கப்பட்ட ரூபா 672,709 மீதிகள் முன்னைய ஆண்டுகளுக்குரியதாக இருந்தது.

**2.3.5 அனுமதிப்பத்திரக் கட்டணம்**

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 149, 150, 151 மற்றும் 152 ஆம் பிரிவுகளின் பிரகாரம் சபையினால் நிர்ணயிக்கப்பட்டதன் பிரகாரம் வியாபார அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் மற்றும் வியாபார வரி என்பவற்றை அறவிடாமையால் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 31,860 ஆன அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் மற்றும் ரூபா 149,020 ஆன வியாபார வரி நிலுவை மீதிகள் காணப்பட்டன.

### 2.3.6 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நீதிமன்றத் தண்டப்பணமாக ரூபா 752,302 தொகையும் முத்திரைக் கட்டணமாக ரூபா 22,905,198 என கிடைக்க வேண்டியிருந்தன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல் மதிப்பீடு

**பிரதேச சபைகளை பலப்படுத்தும் தேசிய நிகழ்ச்சித்திட்டம் - 2015**

சபையால் 2015 யூலை முதல் திசெம்பர் மாதம் வரை செயற்படுத்துவதற்காக செயற்திட்டங்கள் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், 2015 நவம்பர் வரையிலும் யூலை மாதத்திற்காக வழங்கப்பட்டிருந்த ரூபா ஒரு மில்லியனான பணத்தில் ரூபா 191,602 மாத்திரம் செலவிடப்பட்டமையால் எஞ்சிய 5 மாதங்களுக்குரிய பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருந்த ரூபா 5 மில்லியன் தொகை சபைக்கு இழக்கப்பட்டிருந்தது.

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

அரசின் கொள்வனவு வழிகாட்டல் கோவையின் 2.14.1 ஆம் பந்தி பிரிவு மற்றும் 2014 யூலை 4 ஆம் திகதிய கொள்வனவு செயற்பாட்டுக் கோவைக்கான 28 ஆம் இலக்க மேலதிகத்திற்கு இணங்காமல் 3 விலை விபரங்கள் மாத்திரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த 03 சந்தர்ப்பங்களின் போது ரூபா 2,318,950 பெறுமதியான பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

### 3.3 செயற்பாட்டு வினைத்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) வைப்பு பதிவேட்டில் பணத்தை நிறுத்தி வைத்தல்**

2013 ஆம் ஆண்டின் போது இரண்டு நிறுவனங்களிடமிருந்து கிடைக்கப் பெற்றிருந்த ரூபா 162,000 பணம் உரிய செயற்பாடுகளுக்கு பயன்படுத்தாமல் வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன.

**(ஆ) தென் மாகாண அபிவிருத்தி திட்டம்**

தென் மாகாண அபிவிருத்தி திட்டம் - 2014 ஆம் ஆண்டிற்கான உறுப்பினர் நிதிஏற்பாட்டின் கீழ் முன்பள்ளி பாடசாலைகளுக்கு உபகரணங்களை வழங்குவதற்காக வழங்கப்பட்டிருந்த ரூபா 50,000 தொகையில் முன்பள்ளி பாடசாலை மாணவர்களின் நிழற்படங்களை எடுப்பதற்கு ரூபா 49,500 செலவிடப்பட்டிருந்தது.

### 3.4 பதவியணியினர் நிர்வாகம்

சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியிக்குரிய 04 பதவிகளில் 06 வெற்றிடங்களும் 08 பதவிகளில் 36 பேர் மிகையாகவும் இருந்தமை அவதானிக்கப்பட்டதுடன், வெற்றிடங்களை நிரப்புவதற்கும் மிகையான பதவிகளை முறைப்படுத்துவதற்கும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.5 அதிகாரம் பெறப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 132(ஏ) ஆம் பிரிவிற்கு இணங்காமல் அமைச்சரின் எழுத்துமூல அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளாமல் சபை நிதியத்திலிருந்து ரூபா 3,353,062 செலவிடப்பட்டு பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டு 13 அரச சார்பற்ற அமைப்புக்களுக்கு வழங்கப்பட்டிருந்தன.

(ஆ) தென் மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் அங்கீகாரமொன்றில்லாமல் ஓய்வுபெற்ற அரச உத்தியோகத்தரொருவரை மீண்டும் சேவையிலீடுபடுத்தி 12 மாதங்களுக்காக ரூபா 180,000 படிகள் சபை நிதியத்திலிருந்து கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்கான பாதீட்டில் உள்ளடக்கப்பட்டிருந்த 20 செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 852,000 கூட்டுத்தொகையான முழுநிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டும் மேலும் 03 செலவின விடயங்களில் ரூபா 5,822,943 கூட்டுத்தொகையான சேமிப்புக்களும் வேறு 03 செலவின விடயங்களில் நிதிஏற்பாட்டை மிகைத்து ரூபா 42,354,151 செலவினங்களும் காணப்பட்டமையால் பாதீடானது ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லையென அவதானிக்கப்பட்டது.

### 4.2 உள்ளகக் கணக்காய்வு

2014 பெப்ரவரி 24 ஆந் திகதிய தபபா/யஹ/01/ந.சு.லே. ஆம் இலக்க தென் மாகாண உள்ளூராட்சி மன்ற ஆணையாளரின் சுற்றறிக்கையின் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வாளர் ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவினைச் செயற்படுத்தல்

2009 யூன் 09 ஆந் திகதி DMA/2009(i) ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதி வரையில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவொன்று தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

மீளாய்வாண்டின் பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் மூலம் 52 வகையான பொருட்களுக்குரிய 230 அலகுகளில் பற்றாக்குறை வெளிப்படுத்தப்பட்டிருந்த போதிலும் அது தொடர்பாக எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.5 தீர்வு செய்யப்படாத பொறுப்புக்கள்

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தீர்வு செய்யப்படாத மொத்தப் பொறுப்புக்களின் கூட்டுத்தொகை ரூபா 15,458,618 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 11,354,177 முன்னைய ஆண்டிற்கும் ரூபா 505,978 தொகை 2013 ஆம் ஆண்டிற்கு முன்னைய ஆண்டுகளுக்குரியதாக இருந்தன. அம்மீதிகளை தீர்வு செய்வதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

5. **முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

---

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(இ) நிதிக் கட்டுப்பாடு
(ஈ) வருமான நிர்வாகம்
(உ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(ஊ) பதவியணியினர் நிர்வாகம்
(எ) வாகனக் கட்டுப்பாடு